# தலைவாசல் Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 49 | thalaivaasaltv@gmail.com | வெள்ளிக்கிழமை | நவம்பர் 20, 2020


## மாவீரர் நினைவேந்தல் மனு தள்ளுபடி

மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடை செய்ய முயற்சிக்கக் கூடாது என கட்டளை வழங்குமாறு கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட தலையீட்டு நீதிப் பேராணை மனு யாழ். மேல் நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தையோ அல்லது தனிமைப்படுத்தல் சட்ட விதிகளையோ காரணம் காண்பித்து எதிர்வரும் நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை நிகழவிருக்கும் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடை செய்ய முயற்சிக் கூடாது என்று வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு கட்டளை வழங்குமாறு கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தலையீட்டு நீதிப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

03



## தனியாக நினைவுகூர அனுமதி

யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தாங்கள் தனியாக நினைவேந்தல்களை செய்வதனை மன்று ஏற்றுக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணியும் , தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

03



## மத்திய வங்கிக்குள் புகுந்தது கொரோனா

மத்திய வங்கியின் 15ஆவது மாடியில் கடமையாற்றும் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனையடுத்து, மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் பலர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## மட்டு. ஆயர் இல்லத்தில் அருட்தந்தை தனிமைப்படுத்தலில்

தாயாருக்கு கொரோனாத் தொற்று உறுதியான நிலையில் அருட்தந்தையான மகன் மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஆயர் இல்லத்தின் அருட்தந்தை ஒருவர் இன்று தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார

03


## 839 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா

கொரோனாத் தொற்று உறுதியான பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

நேற்றைய தினம் பொலிஸ் அதிகாரிகள் ஆறு பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து கொரோனாத் தொற்றுக்குள்ளான

03



## மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு தடை விதிக்க மல்லாகம் நீதிவான் மறுப்பு

### சின்னங்கள், கொடிகள் பயன்படுத்தத் தடை

பொலிசாரினால் குறிப்பிடப்பட்ட சட்ட ஏற்பாடுகளை மீறினால், அவர்களை கைது செய்யுமாறு பொலிசாருக்கு பணித்த நீதவான் , நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை விதிக்க மறுத்து கட்டளை வழங்கினார்.

நாட்டில் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்யப்பட்ட தமிழீழ

03

## துன்னாலையில் சுற்றிவளைப்பு: நால்வர் கைது!

யாழ்ப்பாணம் - நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட துன்னாலை பகுதியில் இன்று (20) அதிகாலை இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது நால்வர்

03

## கனகபுரம், தேராவில், முழங்காவில் துயிலும் இல்லங்களிலும் மாவீரர் நாளுக்குத்தடை

கிளிநொச்சியில் அமைந்துள்ள கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம் தேராவில் மாவீரர் துயிலும் இல்லங்களை நினைவு நிகழ்வுகளை நடத்தக் கூடாது என தடை உத்தரவு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப் பட்டுள்ளது



03

## நாடாளுமன்றில் மாவீரர்களை நினைவு கூர்ந்த சாணக்கியன் எம்.பி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நாடாளுமன்றத்தில் இன்றைய தினம் மாவீரர்களை நினைவு கூர்ந்திருந்தார்.

அத்துடன், இதன்போது அவர் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்திருந்தார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட



03

## யாழ்.மேல் நீதிமன்றம் நினைவேந்தலுக்கு தடை விதிக்கவில்லை!

### சட்டத்தரணி வி.மணிவண்ணன்

யாழ்.மேல் நீதிமன்றின் இன்றைய கட்டளை மூலம் நினைவேந்தலுக்கு தடை விதிக்கப்படவில்லை என மனுதாரர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகளில்



03






**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# கொரோனோ மரணம் 73 ஆக உயர்வு!



நாட்டில் மேலும் நால்வர் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் களுத்துறையைச் சேர்ந்த 59 மற்றும் 86 வயதுடைய இருவர் கொரோனாவால் மரணித்துள்ளனர்.

அத்துடன், ஏனைய இருவரில் ஒருவர் 27 வயதுடைய கொழும்பு-15 பகுதியைச் சேர்ந்தவர் எனவும் மற்றையவர் கொழும்பு-10 பகுதியைச் சேர்ந்த 70 வயதுடையவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 73 ஆக அதிகரித்துள்ளது.

## பாடசாலைகளை மீள திறக்க, இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

நாட்டின் சில இடங்களைத் தவிர்த்து ஏனைய பாடசாலைகள் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டமைக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளைத் தவிர நாட்டின் ஏனைய பாடசாலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் திறக்கப்படும் என கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது.

குறித்த பாடசாலைகள் தரம் 6 முதல் 13ஆம் வகுப்பு மாணவர்களின் 3 ஆம் தவணை கற்றல் செயற்பாடுகளுக்காக திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய மாணவர்கள் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக உரிய வேலைத்திட்டம் அரசாங்கத்தால் முன்வைக்கப்படவில்லை என அந்த சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## மஸ்கெலியாவில் மேலும் இருவருக்கு கொரோனா!

மஸ்கெலியா காட்மோர் தோட்டத்தில், பிரொக்மோர் பிரிவில் மேலும் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் பி.ஏ. பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை மற்றும் தெஹிவளை ஆகிய பகுதிகளில் கட்டட நிர்மாணப்பணி உதவியாளர்களாக பணியாற்றிய 35 மற்றும் 19 வயது இளைஞர்கள் இருவர், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கடந்த 13 ஆம் திகதி பிரொக்மோர் பகுதியிலுள்ள தமது வீடுகளுக்கு வந்துள்ளனர்.

இவர்கள் இருவரிடமும் கடந்த 17 ஆம் திகதி, பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன. பரிசோதனைகளில் அவர்களுக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து குறித்த இருவரும், அம்பாந்தோட்டையிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நேற்று (வியாழக்கிழமை) அழைத்து செல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தலைவாசல் தினம் ஒரு ஆரோக்கிய தகவல் - 4

குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய விபத்துக்களை தவிர்க்க கடைப்பிடிக்க வேண்டியவை

வெளியிடங்களுக்கு செல்லும் போது...

- முடிந்தளவுக்கு வீட்டில் தனியாக குழந்தைகள் வெளியே செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.
- வீதிகளை நடக்கும் போது அவதானமாக உங்கள் கைகளில் பிடித்து வைத்திருக்க வேண்டும்.
- மோட்டார் சயிக்கிளில் செல்லும் போது குழந்தைகளுக்கான தலைக்கவசம் கட்டாயமாக அணிய வேண்டும்.
- நீச்சல் தடாகம், ஏனைய நீர் நிலைகளில் இருக்கும் போது உங்கள் அவதானிப்பில் இருக்க வேண்டும்.
- கயிறு போன்ற பொருட்களுடன் விளையாடும்போது உங்கள் அவதானிப்பில் இருக்க வேண்டும்.
- பாம்பு, விசப் பூச்சிகள் உள்ள இடங்களை தவிர்க குழந்தைகளுக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**

# சஹ்ரான் மனைவியின் உயிருக்கு அச்சுறுத்தல்



ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரியான சஹ்ரான் ஹாஷிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவின் பாதுகாப்பை பலடுத்துமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல்தெனியவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியே, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கிய பின்னர் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

பாத்திமா ஹாதியாவுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதால், அவர் வெலிகடை சிறையிலிருந்து வெலிகந்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதன் பின்னனியில் இத்தகைய முறைப்பாடுகள் பல கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படும் நபர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய, சிறைச்சாலைகள் திணைக்களம் முழுமையாக முயற்சிக்கும் என நம்புவதாக சுட்டிக்காட்டியுள்ள மனித உரிமைகள் ஆணைக் குழு, ஹாதியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உறுதியான பாதுகாப்பு கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் ஹாதியா தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம், அவரது பாதுகாப்புக்கு பொறுப்பாக செயற்படும் அதிகாரி உள்ளிட்டோரின் விபரங்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறியத் தருமாறும் அந்த குழு கோரியுள்ளது.

## கொரோனா பாதிப்பு: தப்பியோடிய தாயும் மகனும் சிக்கினர்

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், தப்பியோடிய தாயும் மகனும் எஹலியகொட பகுதியில் சிக்கியுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட எஹலியகொட பகுதியைச் சேர்ந்த இவர்கள் இருவரும் கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்தனர்.

இந்த நிலையில், நேற்றிரவு அங்கிருந்து தப்பிச் சென்றதையடுத்து அவர்களை தேடும் பணிகளில் அதிகாரிகள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து அவர்கள் எஹலியகொட, யாபா வீதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து இன்று காலை பிடிபட்டுள்ளனர்.

## குடும்பஸ்தர் ஒருவர் அடித்து, வெட்டிக் கொலை

முல்லைத்தீவு முள்ளியவளை முறிப்பு கிராமத்தில் பால்பண்ணை பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் அடித்து, வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றிரவு (19) இடம்பெற்றுள்ளது.

32 அகவையுடைய ஒரு பிள்ளையின் தந்தையான ஜெயமோகன் நிரோசன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய குடும்ப பெண் ஒருவர் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த குடும்பஸ்தரின் உடலில், தலையில் இரண்டு வெட்டுக்காயங்கள் காணப்படுவதால் பிரேத பரிசோதனையின் பின்னர் உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

சம்பவம் குறித்து முள்ளியவளை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# திடீரென கறுப்பு நிறமாக மாறிய கிணற்று நீர்!

### முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேணாவில் கிராமத்தில் கிணற்று நீர் திடீரென கறுப்பு நிறமாக மாறிய அதிசய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கிணற்று நீர் கறுப்பு நிறமாக மாறிய சம்பவத்தை மக்கள் பலர் சென்று பார்வையிட்டு வருவதோடு இந்த சம்பவம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது தொடர்பான மேலதிக விடயங்கள் இதுவரை தெரியவில்லை.





# காசு கொடுக்க வேண்டாம்!

வடக்கு கிழக்கு ஒப்பனையாளர் உதவும் கரங்கள் எனும் பெயரில் நிதி திரட்டப்படுவதாகவும் அதற்கு நன் கொடைகளை வழங்க வேண்டாம் என

வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது. இன்றைய தினம் தமது ஊடக அறிக்கை ஒன்றின் ஊடாக குறித்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தில் ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கி இயங்கி வருகின்ற அனைத்து அழககங்களின் உரிமையாளர்கள், பணியாளர்களின் மேம்பாட்டிற்காக செயற்பட்டுவரும் வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் எனும் அமைப்பை சீர்குலைக்கும் நோக்குடன் திட்டமிட்ட வகையில் சிலரால் வடக்கு கிழக்கு ஒப்பனையாளர் உதவும் கரங்கள் எனும் பெயரில் இலட்சணை ஒன்றையும் அறிமுகம் செய்து

எமது அங்கத்தவர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் நிதி மோசடி செய்ய முனைப்புகாட்டப் பட்டுள்ளது. அதற்கு அமைவாக உண்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு நிதி சேகரிக்கப்பட்டு வருவதாக ஐந்து மாவட்டங்களிலிருந்தும் எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிதி சேகரிப்பிற்கும் எமது வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனத்தின் ஆளுகைக்குட்பட்ட எந்தவொரு அழகக சங்கங்களிற்கும் தொடர்பு இல்லை என்பதனை பகிரங்கப்படுத்துவதுடன்,

இந்த மோசடி கும்பலின் திட்டமிட்ட செயற்பாட்டை நம்பி எவரும் நன்கொடைகளை வழங்க வேண்டாம் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மட்டு. ஆயர்...

பிரிவினர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஞானசூரியம் சதுக்கத்திலேயே 74வயதுடைய பெண்ணொருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் சுய தனிமைப்படுத்தலில் இருந்தாலும் அங்கு சென்று அவருடன் பழகியவர்களை இனம்கண்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை சுகாதார பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

இதையடுத்தே அவரின் மகனான அருட்தந்தை ஒருவரை மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

## அரச மரியாதையுடன்...

ஒருவரான சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடை செய்ய முயற்சிக்கக் கூடாது என கட்டளை வழங்குமாறு கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட தலையீட்டு நீதிப் பேராணை மனு யாழ். மேல் நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர், அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

எம்மால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைக்காக அரச சட்டத்தரணிகளின் விசேட அணி ஒன்று கொழும்பில் இருந்து வந்து முன்னிலையாகி இருந்தனர்

எங்களுடைய விண்ணப்பம் தொடர்பில் அவர்கள் பூர்வாங்க ஆட்சேபனையை தெரிவித்தனர். அதாவது வடமாகாண மேல் நீதிமன்றில் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மன்றுக்கு நியாயாதிக்கம் இல்லை என்று

இந்த வழக்கானது தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்டது எனவும், இவ்வாறான வழக்குகளை கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றிலையே தாக்கல் செய்ய முடியும். என கூறி இந்த வழக்கினை இந்த நீதிமன்றில் எடுத்துக்கொள்ள முடியாது என அவர்களால் தெரிவிக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையின் அடிப்படையிலையே இந்த வழக்கு விளங்கப்பட்டது. அது தொடர்பில் மாத்திரமே மன்றினால் கட்டளை ஆக்கப்பட்டு இருந்தது.

அந்த கட்டளையில் மன்று தெரிவித்திருப்பது, இந்த வழக்கின் விடய பொருள் தேசிய பாதுகாப்புடன் தொடர்பு உடையது என்பதனால் தமக்கு அதிகாரம் இல்லை என சொல்லியிருக்கிறது.

அதனை தவிர வேறு எந்த விடயமும் கட்டளையாக் கப்படவில்லை.

சிலர் கருத கூடும் இந்த கட்டளையானது நினைவேந் தலுக்கு தடையாக உள்ளது என அவ்வாறு எந்த தடையையும் மேல் நீதிமன்று விதிக்கவில்லை.

எமது மனுவில் எதிர் மனு தாரர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் எமக்கு தடை விதிக்க கூடாது என்றே கோரி இருந்தோம். எமது மனு மீதான விசாரணை எதிர் மனு தாரர்களின் பூர்வாங்க ஆட்சேபனையை ஏற்று மனு தள்ளுபடி செய்யப்பட்டதே தவிர நினைவேந்தலுக்கு தடை விதிக்கப்படவில்லை என தெரிவித்தார்.

அதேவேளை மேல் நீதிமன்றினால் மனு தள்ளுபடி செய்யப்பட்டதை அடுத்து ஊடகங்களுக்கு பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவிக்கையில், இதொரு வரலாற்று தீர்ப்பு எனவும், புலிகளை நினைவு கூறும் எந்தவொரு நிகழ்வையும் பொலிசார் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தனியாக நினைவுகூர...

மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடை செய்ய முயற்சிக்கக் கூடாது என கட்டளை வழங்குமாறு கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட தலையீட்டு நீதிப் பேராணை மனு யாழ். மேல் நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர், அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தாங்கள் தனியாக நினைவேந்தல்களை செய்வதனை மன்று ஏற்றுகொள்வதாகவும், ஆனால் கூட்டாக சேர்ந்து, மாவீரர் நினைவேந்தல் எனும் அடிப்படையில் செய்வது தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

ஆகவே உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தனியாக நினைவேந்தல்களை செய்யலாம் கூட்டாக பொது இடங்களில் சேர்ந்து நின்று செய்வது தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டதால் மேல் நீதிமன்றுக்கு நியாதிக்கம் இல்லை என நீதிபதி குறிப்பிட்டார் என தெரிவித்தார்.

## கனகபுரம்...

குறித்த கட்டளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் மாவீரர்களை நினைவுகூர்வதற்கோ தடைவிதிக்கப்பட் டுள்ளதாக கிளிநொச்சி பொலீஸ் நிலைய பொறுப் பதிகாரியினால் நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் இன்று கையளிக்கப்பட்டது.

மாவீரர் வாரம் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த நிகழ்வுகளை நேற்று வவுனியாவில் நடத்துவதற்கு நீதிமன்றத்தினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது இதேபோன்று இன்று(20.11.2020) கிளிநொச்சி அமைந்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு மாவட்ட அலுவலகமான அறிவகத்திற்கு சென்ற கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரி சென்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் காரியாலயத்தில் நீதிமன்ற கட்டளையை வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஏ.ஆர். 1679 /20 என்ற வழக்கின் பிரகாரம் 21.112020 தொடக்கம் 27.11.2020 வரையான நாட்களில் எந்தவிதமான அஞ்சலி நிகழ்வுகள் எதனையும் நடத்தக் கூடாது என கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது

மேற்படி கட்டளையை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தலைமை பொலிஸ் பரிசோதகர் ஜீவகஸ்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கட்டளையை இன்று காலை 9.30 மணியளவில் வழங்கி வைக்கப்பட்டது

கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் அவர்களுக்கும் இன்று கிளிநொச்சி பொலிசாரினால் நீதிமன்ற தடையுத்தரவு கரைச்சி பிரதேச சபையில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது

## மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு...

விடுதலைப் புலிகள் அமைப்பில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் நிகழ்வுகள் வரும் 27ஆம் திகதி வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் உள்ளபட காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் மாவீரர் நாள் நினைவேந் தலை நடத்த தடைவிதிக்கக் கோரி

மல்லாகம் நீதிமன்றில் நேற்றைய தினம் வியாழக்கிழமை காங்கேசன்துறை பொலிஸார் மனுத் தாக்கல் செய்தனர்.

குறித்த மனு மீதான விசாரணையை நேற்றைய தினம் மன்று இன்றைய தினத்திற்கு திகதியிட்டு ஒத்திவைத்தது.

அதனடிப்படையில் குறித்த மனு மீதான விசாரணை இன்றைய தினம், மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் இடம்பெற்றது.

பொலிசாரினால் மனுவில் குறிப்பிடப்பட்டு இருந்த இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 106ஆம் பிரிவின் கீழான சட்ட ஏற்பாடுகளை மீறாதும், இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களில் கூறப்பட்ட தடை செய்யப்பட்ட இயக்கங்களின் சின்னங்கள், கொடிகள் உள்ளிட்டவற்றை பயன்படுத்தாமலும், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறாமலும் நிகழ்வுகளை நடத்த முடியும் என்றும் அதனை மீறினால் மீறுபவர்களை கைது செய்யமாறும் கட்டளையில் குறிப்பிட்டார்.

அத்துடன், பொதுக் கூட்டங்களை நடத்துவதனால் பிரிவின் பிரதேச மருத்துவ அதிகாரியின் அனுமதியுடனயே முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

எதிர்மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான விஸ்வலிங்கம் திருக்குமரன், வி.மணிவண்ணன் உள்ளிட்ட சட்டத்தரணிகள், இலங்கையின் சட்டதிட்டங்களை மீறமாட்டோம் என வழங்கிய உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே இந்த கட்டளை வழங்கப்பட்டது.

## நாடாளுமன்றில்...

அவர், “பிள்ளையான் சிறையிலிருந்து வருகை தந்து ஆணைக்குழுவுக்கு செல்கின்றார். பின்னர் கூட்டங்களில் கலந்துகொள்கின்றார். அதனைத் தொடர்ந்து காரியாலத்துக்கு செல்கின்றார். அங்கு மக்களை வருமாறு அழைத்து அவர்களுடன் கலந்துரையாடுகின்றார்.

இவ்வாறு சிறையிலுள்ள கைதிகளுக்கு செய்ய முடியுமா? ஏனைய குற்றங்கள் புரிந்த சிலரை அவர்களது பெற்றோரினால் கூட காண முடியாது. காரணம் கொரோனா அச்சுறுத்தலாகும்.

ஆனால், பிள்ளையான் மட்டக்களப்பு வருகின்றார், ஆலய வழிப்பாட்டுக்கு செல்கின்றார். நிகழ்வுகளில் பங்கேற்றுகின்றார். இதனை எவ்வாறு செய்ய முடியும். இவ்வாறான செயற்பாடுகளை செய்வதற்கு எவ்வாறு இடமளிக்க முடியும்.

83 கலவரத்தினைத் தொடர்ந்து நாட்டை விட்டுச் சென்றவர்கள் நாட்டுக்கு திரும்பிவர வேண்டுமாயின் முதலில் அவர்களுக்கு இங்கு வாழ்வதற்கு முடியும் என்ற எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும்- என்றார்.

## துன்னாலையில்...

கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தேடுதல் நடவடிக்கையில் சிறப்பு அதிர டிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து ஈடுபட்டிருந்ததாக தெரியவருகிறது.

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருந்த நால்வரையும் கைது செய்வதற்கு நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் தலைமறைவாகியிருந்தவர்கள் என்று தெரியவருகிறது.

இதன்போது இவர்களுடன் தொடர்புபட்டிருக்காத நான்கு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## மாவீரர் நினைவேந்தல்...

குறித்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன் போது, மனு தாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், தி. அருச்சுனா, வி.திருக்குமரன், செல்வி த.துளசி, திருமதி. க.திருக்குமரன் மற்றும் கே.சஜந்தன் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட சட்டத்தரணி கள் முன்னிலையாகினர்.

எதிர்மனுதாரர்களாக வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பி.பி.எஸ்.எம். தர்மரட்ண, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் அழைக் கப்பட்டிருந்தனர்

பிரதிவாதிகள் தரப்பில் சட்டமா அதிபர் திணைக் களத்தில் இருந்து முன்னிலையாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 839 பொலிஸ்...

பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட படை அதிகாரிகளின் எண்ணிக்கை 839 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு தொற்று உறுதியான 635 பொலிஸ் அதிகாரிகளும் 204 பொலிஸ் விசேட படை அதிகாரிகளும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பி டத்தக்கது.

# அரசாங்கத்துக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் விரைவில் பேச்சுவார்த்தை

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நாடாளுமன்றகட்டடத்தொகுதியில் நேற்று (வியாழக்கிழமை) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருடன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உத்தியோகப்பூர்வமற்ற சந்திப்பில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த யோசனையை முன்வைத்ததாகவும் அதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இணக்கம் தெரிவித்த தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி விரைவில் பேச்சு வார்த்தைக்கான திகதியை நிர்ணயித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜனாதிபதியை பதவி விலகக்கோரி ஹெயிட்டியில் போராட்டம்!



ஹெயிட்டி தலைநகர் போர்ட்-ஓ-பிரின்ஸில், ஜனாதிபதியை பதவி விலகக்கோரி ஆயிரக்கணக்கானோர் போராட்டம் நடத்தியுள்ளனர்.

ஹெயிட்டிய புரட்சியின் கடைசி பெரிய போரின் 217ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் ஒரு தேசிய விடுமுறையில் இந்த எதிர்ப்பு போராட்டம் நடந்தது. அங்கு உள்ளூர் படைகள் நெப்போலியனின் பிரெஞ்சு பயணப் படைகளைத் தோற்கடித்தன.

எதிர்ப்பு போராட்டம் தொடர்ந்து வன்முறையில் முடிய ஜனாதிபதி ஜோவனல் மோஸ், கடுமையான பாதுகாப்பின் கீழ், வீரர்களுக்கு தேசிய கல்லறையில் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். எதிர்ப்பாளர்கள் இப்பகுதியை அடைய முயன்றனர். ஆனால் பாதுகாப்புப் படையினரால் தடுக்கப்பட்டது.

பொருளாதாரத்தை தவறாக நிர்வகித்த தாகவும், வெளிநாடுகளில் உள்ள வங்கிக் கணக்குகளில் பில்லியன்கணக்கான சர்வதேச உதவிகளைப் பறித்தவர்களைப் பொறுப் பேற்கத் தவறியதாகவும் மொய்ஸ் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதனால் ஜனாதிபதியை பதவி விலகக்கோரி கோஷமிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளில் உள்ள பொருட்களுக்கு தீ வைத்ததோடு பொலிஸ் அதிகாரிகள் மீது பொருட்களை வீசினர். பதிலுக்கு, பொலிஸார் எதிர்ப்பாளர்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர்.

இதன்போது ஒரு இளைஞன் தலையில் சுடப்பட்டதாவும், காயமடைந்தவரை மற்ற எதிர்ப்பாளர்கள் தூக்கி சென்றதாகவும் ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# கள்ள நோட்டுக்களுடன் தொடர்புடைய மூவர் கைது

கள்ள நோட்டுக்களுடன் தொடர்புடைய சட்ட விரோத நடவடிக்கையுடன் தொடர்புடைய மூவர் மதவாச்சியில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரம் மற்றும் வவுனியா பொலிஸார் இணைந்து நேற்று (19.11) அவர்களைக் கைது செய்தனர். அவர்களிடமிருந்து வெளிநாட்டு போலி நாணயதாள்கள் 200, நாணயம் அச்சிடும் இயந்திரம், 100 டொலர் பெறுமதியான அமெரிக்க நாணயதாள்கள் மூன்று மற்றும் உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மருத்துவர் எனத் தெரிவித்த பொலிஸார், அவரிடம் இருந்து வெவ்வேறு பெயர்களில் தயாரிக்கப்பட்ட ஏழு மருத்துவர்களின் றப்பர் முத்திரைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், ஊசி மருந்துகள் என்பனவும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவித்தனர். கள்ளநோட்டுக்களை வவுனியாவில் உள்ள நபர் ஒருவரிடம் கொடுத்து அமெரிக்க டொலர்களாக மாற்றுவதற்கு முயற்சித்த வேளையிலே மூவரும் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொட்டகலை, அனுராதபுரம் மற்றும் மொனராகலை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளனர்.

# நேற்று 400இற்கு மேற்பட்டோருக்கு கொரோனா



நாட்டில் மேலும் 437 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்று கண்டறியப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 330 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 18 ஆயிரத்து 839ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று மட்டும் 316 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை 12 ஆயிரத்து 903 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஆறாயிரத்து 184 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா தொற்றினால் ஏற்பட்ட மொத்த மரணங்கள் 69ஆகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 39 பேரை சட்டவிரோதமாக கொன்ற அவுஸ்ரேலிய படை வீரர்கள்

ஆப்கானிய போரின் போது அவுஸ்ரேலிய உயர் பாதுகாப்பு படை வீரர்கள் 39 பேரை சட்டவிரோதமாக கொன்றனர் என்பதற்கு 'நம்பகமான சான்றுகள்' உள்ளன என நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒரு அறிக்கை தெரிவிக்கின்றது.

அவுஸ்ரேலிய பாதுகாப்பு படை (ஏ.டி.எஃப்) தனது படைகளின் தவறான நடத்தை குறித்த நான்கு ஆண்டு விசாரணையின் முடிவுகளை வெளியிட்டுள்ளது.

2009ஆம் மற்றும் 2013ஆம் ஆண்டுகளுக்கு இடையில் 'கைதிகள், விவசாயிகள் அல்லது பொதுமக்கள்' கொல்லப்பட்ட வழக்குகள் தொடர்பாக 19 தற்போதைய அல்லது முன்னாள் வீரர்களை பொலிஸார் விசாரிக்க வேண்டும் என்று அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

சில வீரர்களிடையே சரிபார்க்கப்படாத 'போர்வீரர் கலாச்சாரம்' இருந்ததாக அவுஸ்ரேலிய பாதுகாப்பு படை குற்றஞ்சாட்டியுள்ளது.



மேஜர் ஜெனரல் ஜஸ்டிஸ் பால் ப்ரெட்டன் நடத்திய விசாரணை, 400க்கும் மேற்பட்ட சாட்சிகளுடன் இதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இளம் படையினர் கைதிகளை சுட்டுக் கொல்வதன் மூலம் முதல் கொலை செய்யும்படி பணிக்கப்பட்டனர். இது 'இரத்தப்போக்கு' என்று அழைக்கப்படுகிறது.

குற்றங்களை மறைக்க ஆப்கானிய உடல்களுக்கு அருகே ஆயுதங்கள் மற்றும் பிற பொருட்கள் வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான், அவுஸ்ரேலியா 'நீதியை உறுதி செய்வதில்' உறுதியாக இருப்பதாக உறுதியளித்தது.

23 தனித்தனியான சம்பவங்களில் 25 சிறப்புப் படை வீரர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாகவோ சட்டவிரோத கொலைகளில் பங்கேற்றுள்ளனர்.

'குற்றவாளியின் நோக்கம் தெளிவாகவோ, குழப்பமாகவோ அல்லது தவறாகவோ இருந்த சூழ்நிலைகளில் எதுவும் நிகழ்ந்ததாகக் கூறப்படவில்லை' என ஏடிஎஃப் தலைவர் ஜெனரல் அங்கஸ் காம்ப்பெல் தெரிவித்துள்ளார்.